சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – சங்ககிரி, கோத்தகிரி, அவிநாசி, பெருந்துறை, கவுந்தப்பாடி, போளூர், செங்கம், கன்னியாகுமரி, அரூர், சூலூர், மோகனூர், நாரவாரிக்குப்பம் மற்றும் வேப்பம்பட்டு – 13 புதிய நகராட்சி மன்றங்களை (Municipal Councils) அமைத்து உருவாக்குதல் – உத்தேச முடிவு – ஆணைகள் – வெளியிடப்படுகிறது

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் [நநி.5(2)] துறை

அரசாணை (நிலை) எண்.203

நாள்.31.12.2024
திருவள்ளுவராண்டு 2055
ஸ்ரீ குரோதி வருடம், மார்கழி 16
படிக்கப்பட்டவை:-

(1) அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 23.11.2023.
(2) பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.14586/ 2023/ இ2, நாள்.01.10.2024 மற்றும் 14.11.2024.
(3) நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து ஒற்றைக்கோப்பு முறைமையில் பெறப்பட்டக் குறிப்புரை, நாள்.17.10.2024 மற்றும் 21.11.2024.
(4) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண். 6851/2021/சி1, நாள்.21.12.2024
(5) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண். எப்1/7879/2021, நாள். 21.12.2024
(6) நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண். Y1/13296/2024, நாள். 20.12.2024
(7) தருமபுரி மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண். 1151/2023/பே3, நாள்.25.10.2024
(8) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண். 5134/2023/A4, நாள். 21.12.2024
(9) ஈரோடு மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண்.926/2022/அ4, நாள். 21.12.2024

(10) திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.எண். 1800/2024/அ3, நாள்.20.12.2024

*******

<u>ஆணை:-</u>

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021–22–ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன் கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:-

"2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021–ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகளின் தரம் உயர்த்தப்படுகிறது."

2. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, அதாவது, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல், உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அருகருகே அமைந்துள்ள ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை இணைப்பதன் மூலம் புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், எல்லைகளை விரிவாக்கம் செய்தல் போன்றவற்றை ஆய்வு செய்து தக்க செயற்குறிப்புகளை உருவாக்குதல், பரிந்துரைகளை அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவொன்றை அமைத்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. இதனைத் தொடர்ந்து, உயர்நிலைக்குழு, பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகள்/விவாதங்களை மேற்கொண்டது. ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகள் விரிவாக்கம் தொடர்பாக, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழு அளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கானத் தேவைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு நிலை அலுவலர்கள் போன்ற தொடர்புடைய அனைத்து தரப்பினரின் (Stakeholders) கோரிக்கைகள்/கருத்துகள், போன்றவை உயர்நிலைக்குழுவின் பல்வேறு கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு, விவாதிக்கப்பட்டு பல்வேறு தற்காலிக செயற்குறிப்புகள் (Tentative Proposals) உருவாக்கப்பட்டன.

4. இதனடிப்படையில், இப்பொருள் தொடர்பான பல்வேறு பொருண்மைகள் குறித்து உயர்நிலைக் குழுவில் 18.12.2024 அன்று காணொளி வாயிலாக 28 மாவட்ட ஆட்சியர்களுடன் இறுதி ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

5. இந்நிலையில், போளூர், செங்கம், கன்னியாகுமரி, அரூர், சூளூர், மோகனூர், கவுந்தம்பாடி, நாரவாரிக்குப்பம் மற்றும் வேப்பம்பட்டு ஆகிய உள்ளாட்சி அமைப்புகளை 9 புதிய நகராட்சி மன்றங்களாக அமைத்து உருவாக்குதல் குறித்து மேலே 4 முதல் 10 வரை படிக்கப்பட்ட தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புகளின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

(i) போளூர் பேரூராட்சி:

பொதுமக்களுக்கு, மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள், உயர் கட்டமைப்பு வசதிகள், மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் உடனுக்குடன் கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதாலும், இந்த மேம்பாட்டினால் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதால் போளூர் பேரூராட்சியினை நகராட்சி மன்றமாக அமைத்துருவாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சியின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:-

| உள்ளாட்சி அமைப்பின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|
| போளூர் | 1299.51 | 28,123 |

(ii) செங்கம் பேரூராட்சி:

செங்கம் பேரூராட்சி பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு, மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள், உயர் கட்டமைப்பு வசதிகள், மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் உடனுக்குடன் கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதாலும், இந்த மேம்பாட்டினால் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதால் செங்கம் பேரூராட்சியினை நகராட்சி மன்றமாக அமைத்துருவாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சியின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:–

| உள்ளாட்சி அமைப்பின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|
| செங்கம் | 878.33 | 26,980 |

(iii) காவந்தபாடி ஊராட்சி

காவந்தபாடி ஊராட்சியின் மக்கள்தொகை 40% அதிகரித்துள்ளதாலும், குடியிருப்புகளின் எண்ணிக்கை 79% அதிகரித்துள்ளதாலும், விவசாய நிலங்கள் 50%–க்கு கீழே உள்ளதாலும், கலைஞர் கனவு இல்லம் (KKI) மற்றும் பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் (PMAY) ஆகிய திட்டங்களின் கீழ் வீடு தேவை உள்ளவர்களின் எண்ணிக்கை வெறும் இரண்டாக உள்ளதாலும், இந்த ஊராட்சியின் நகர்ப்புரத் தன்மையைக் கருத்தில் கொண்டு காவந்தபாடி ஊராட்சியுடன் சலங்கப்பாளையம் பேரூராட்சியினை இணைத்து நகராட்சி மன்றமாக அமைத்து உருவாக்கவும் பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி மன்றத்தின் பதவிக் காலம் முடிந்த பின்னர், அப்பேரூராட்சியினை மேற்படி நகராட்சி மன்றத்துடன் இணைக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகை விவரங்களும் பின்வருமாறு:

| வ. எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|---|
| 1. | கவுந்தப்பாடி ஊராட்சி | 101.35 | 28590 |
| 2. | சலங்கப்பாளையம் பேரூராட்சி | 108.90 | 15609 |
| 3. | பி. மேட்டுப்பாளையம் பேரூராட்சி | 60.13 | 9737 |

(iv) கன்னியாகுமரி பேரூராட்சி:

கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சி 4.91 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. 2011–ஆம் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 22,453 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 24,500 ஆக உள்ளது. மேலும், இச்சிறப்புநிலை பேரூராட்சியின் கடந்த மூன்று வருடங்களுக்கான சராசரி வருமானம் ரூ.547.00 இலட்சம் ஆகும். கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சி இந்திய திருநாட்டின் தென்கோடி எல்லையில் உள்ள சர்வதேச சுற்றுலாத் தலம் ஆகும். இங்கு முக்கடல் சங்கமிக்கும் திருவேணிசங்கமம், கடல் நடுவே உள்ள பாறை மீது அமைந்திருக்கும் விவேகானந்தர் மண்டபம், 2000–ஆம் வருடம் நிறுவப்பட்ட 133 அடி உயரம் கொண்ட திருவள்ளுவர் சிலை, பகவதி அம்மன் திருக்கோயில், காந்திமண்டபம், ஒரே இடத்தில் பார்க்கக்கூடிய சூரிய உதயம் மற்றும் அஸ்தமனம் ஆகியன சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் சிறப்புடையன. இப்பகுதியில் நிரந்தரமாக குடியிருக்கும் மக்களைத் தவிர சுமார் 45,000 மக்களும், சீசன் காலங்களில் சுமார் ஒரு இலட்சம் மக்களும் தினசரி வந்து செல்கின்றனர். எனவே, கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சியின் நகர்ப்புரத்தன்மை, மக்கள்தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மேலும் சிறப்பான வகையில் அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கில் கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சியினை நகராட்சி மன்றமாகத் தரம் உயர்த்திட அரசுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. இப்பேரூராட்சியின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:–

| உள்ளாட்சி அமைப்பின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|
| கன்னியாகுமரி பேரூராட்சி | 1217.09 | 22,453 |

(v) அரூர் பேரூராட்சி:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டம், அரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, அதன் அருகிலுள்ள ஊராட்சிகளுடன் இணைத்து நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என அறிவித்துள்ளார். தருமபுரி மாவட்டம், அரூர் சிறப்புநிலை பேரூராட்சியானது 18 வார்டுகளுடன் 14.750 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பேரூராட்சியின் மூன்றாண்டுகளின் சராசரி வருவாய் ரூ.735.25 இலட்சம் ஆகும். மேலும், அரூர் சிறப்பு நிலை பேரூராட்சியுடன் அதன் அருகில் உள்ள மோபிரிபட்டி மற்றும் தொட்டம்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகள் இணைக்கப்படும் நிலையில், அரூர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கான ஆண்டு வருவாய் மற்றும் மூன்றாண்டு சராசரி வருவாய் ரூ.6 கோடிக்கு மேல் உள்ளதால், நகராட்சியாக தரம்

உயர்த்துவதற்கான வரையறையினை நிறைவு பெற்றுள்ளது. அரூர் சிறப்பு நிலைப் பேரூராட்சியுடன், அதன் அருகில் உள்ள மோப்பிரிப்பட்டி மற்றும் தொட்டம்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகளை இணைத்து நகராட்சி மன்றமாகத் தரம் உயர்த்த அரூர் சிறப்பு நிலை பேரூராட்சி மன்றத்தால் (தீர்மானம் எண்.380, நாள்.08.07.2024) தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:-

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|---|
| 1. | அரூர் பேரூராட்சி | 7.35 | 25,469 |
| 2. | மோபிரிபட்டி ஊராட்சி | 0.31 | 7,737 |
| 3. | தொட்டம்பட்டி ஊராட்சி | 0.12 | 3,997 |

**(vi) சூலூர் பேரூராட்சி:**

சூலூர் பேரூராட்சியுடன் கலங்கல் மற்றும் காங்கேயம்பாளையம் ஆகிய இரண்டு ஊராட்சிகளை இணைத்து பின்வருமாறு நகராட்சி மன்றமாக அமைத்துருவாக்க பரிந்துரைக்கப்படுகிறது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:-

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|---|
| 1. | சூலூர் பேரூராட்சி | 1838.17 | 27909 |
| 2. | கலங்கல் ஊராட்சி | 54.65 | 9640 |
| 3. | காங்கேயம்பாளையம் ஊராட்சி | 53.34 | 8251 |

**(vii) மோகனூர் பேரூராட்சி:**

மோகனூர் பேரூராட்சி மற்றும் குமாரபாளையம், பேட்டப்பாளையம், ராசிபாளையம் மற்றும் மணப்பள்ளி என 4 ஊராட்சிகள் அவை அருகருகே அமைந்துள்ளமை; இவ்வுள்ளாட்சி அமைப்புகளில் குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை;

குறைவான விளைநிலங்கள் போன்ற நகர்ப்புரத்தன்மைக்கான காரணிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மோகனூர் பேரூராட்சி மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4 ஊராட்சிகளை இணைத்து மோகனூர் நகராட்சி மன்றமாக அமைத்துருவாக்கப் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:–

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|---|
| 1. | மோகனூர் பேரூராட்சி | 840.47 | 14315 |
| 2. | குமாரபாளையம் ஊராட்சி | 4.21 | 4316 |
| 3. | பேட்டப்பாளையம் ஊராட்சி | 9.11 | 3066 |
| 4. | ராசிபாளையம் ஊராட்சி | 9.16 | 2916 |
| 5. | மணப்பள்ளி ஊராட்சி | 13.03 | 5940 |

**(viii) நாரவாரிக்குப்பம் பேரூராட்சி:**

சென்னைக்கு அருகில், திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள நாரவாரிக்குப்பம் பேரூராட்சி 18 வார்டுகளை கொண்டதாகும். இதன் மக்கட்தொகை, 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 20,946 ஆகும். நாரவாரிக்குப்பம் பேரூராட்சியுடன் அழிஞ்சிவாக்கம், கிராண்ட்லைன், புள்ளியான், சென்றம்பாக்கம், தீர்த்தக்கரையம்பட்டு, வடகரை, விளாங்காடுபாக்கம், பொத்தூர் மற்றும் பாமதுக்குளம் ஆகிய கிராம ஊராட்சிகளை இணைப்பதினால், ஊராட்சி பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதுடன் இப்பகுதிகளில் ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி செயல்படுத்த வழிவகை ஏற்படும். எனவே, நாரவாரிக்குப்பம் பேரூராட்சியுடன் இந்த 9 கிராம ஊராட்சிகளை இணைத்து நாரவாரிக்குப்பத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக நாரவாரிக்குப்பம் நகராட்சி மன்றமாக உருவாக்கிட பரிந்துரைக்கப்படுகிறது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:–

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) |
|---|---|---|---|
| 1. | நாரவாரிக்குப்பம் பேரூராட்சி | 842.64 | 20946 |
| 2. | அழிஞ்சிவாக்கம் ஊராட்சி | 9.35 | 1305 |
| 3. | கிராண்ட்லைன் ஊராட்சி | 94.45 | 3844 |
| 4. | புள்ளியான் ஊராட்சி | 82.14 | 1643 |
| 5. | சென்றம்பாக்கம் ஊராட்சி | 19.11 | 794 |
| 6. | தீர்த்தக்கரையம்பட்டு ஊராட்சி | 41.58 | 5412 |
| 7. | வடகரை ஊராட்சி | 14.15 | 2672 |
| 8. | விளாங்காடுபாக்கம் ஊராட்சி | 41.36 | 5767 |
| 9. | பொத்தூர் ஊராட்சி | 19.48 | 2739 |
| 10. | பாமதுக்குளம் ஊராட்சி | 52.98 | 9271 |

(ix) வேப்பம்பட்டு பேரூராட்சி:

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 25 வேப்பம்பட்டு, 26 வேப்பம்பட்டு, பெருமாள்பட்டு மற்றும் நத்தமேடு ஆகிய 4 கிராம ஊராட்சிகளின் மொத்த மக்கள்தொகை, 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 30,132 ஆகும். 2024 ஆம் ஆண்டு உத்தேச மக்கட்தொகை 85,907 ஆகும். மேற்படி 4 கிராம ஊராட்சிகள் 80 சதவீதம் நகர்ப்பகுதிகளாகவும், கிராம வணிக வளாகங்களாகவும் அமைந்துள்ளன. வேப்பம்பட்டு உள்ளிட்ட 4 கிராம ஊராட்சிகள் சென்னைக்கு அருகில் உள்ளதால் இவற்றை இணைத்து, புதிய நகராட்சியாக உருவாக்கப்படும் நிலையில், இப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், இப்பகுதிகளில் ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி செயல்படுத்த வழிவகை ஏற்படும். எனவே, இந்த 4 கிராம ஊராட்சிகளை இணைத்து, புதியதாக "26 வேப்பம்பட்டு ஊராட்சியினை" தலைமையிடமாக கொண்டு புதியதாக வேப்பம்பட்டு நகராட்சி மன்றம் உருவாக்கிட பரிந்துரைக்கப்படுகிறது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு:-

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. இலட்சத்தில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி.) |
|---|---|---|---|
| 1. | 25 வேப்பம்பட்டு | 34.2 | 6348 |
| 2. | 26 வேப்பம்பட்டு | 37.04 | 5913 |
| 3. | பெருமாள்பட்டு | 62.65 | 7052 |
| 4. | நத்தம்மேடு | 24.31 | 10816 |

6. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதங்களில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 2023–24–ஆம் நிதி ஆண்டிற்கான மானியக்கோரிக்கை விவாதத்தின் மீதான பதிலுரையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள், மற்றவற்றிற்கிடையே சங்ககிரி, கோத்தகிரி, அவிநாசி மற்றும் பெருந்துறை ஆகிய பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து சேலம், நீலகிரி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இந்த 4 பேரூராட்சிகளையும் நகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கு, அதன் மூன்றாண்டு சராசரி வருமானமும் மக்கள் தொகையும் பின்வருமாறு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்:–

| வ. எண். | பேரூராட்சியின் பெயர் | 3 ஆண்டு சராசரி வருமானம் (ரூ. கோடியில்) | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி.) |
|---|---|---|---|
| 1. | சங்ககிரி | 8.45 | 29,467 |
| 2. | கோத்தகிரி | 7.90 | 28,207 |
| 3. | அவிநாசி | 13.31 | 28,868 |
| 4. | பெருந்துறை | 1448.65 | 24,930 |

7. நகராட்சி மன்ற அமைத்துருவாக்கம் தொடர்பான முக்கிய விவரங்கள் பின்வருமாறு:–

(அ) நகராட்சி மன்றங்களாக அமைத்துருவாக்க பரிந்துரைக்கப்படும் பேரூராட்சிகள்/ஊராட்சிகள் போன்றவை நகரங்களின்/ பெருநகரங்களின் நுழைவாயிலாக அமைந்துள்ளதுடன், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெருநிறுவனங்கள்,

தொழிற்சாலைகள் போன்றவற்றை தங்களது பகுதிகளில் அமையப்பெற்றுள்ளன. இப்பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் ஏராளமானோர், சுற்றியுள்ள பகுதிகளில் குடியிருந்து வருகின்றனர். இப்பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் சிறப்பாக செய்வதற்கும், ஒருங்கிணைந்த திட்டமிட்ட வளர்ச்சிக்கும் நகர்ப்புரங்களின் நிலையை உயர்த்த (Upgradation) வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் இப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(ஆ) நகராட்சி மன்றங்களாக அமைத்துருவாக்கப்படும் பேரூராட்சிகளும், ஊராட்சிகளும் வேகமாக நகரமயமாகி வருகின்றன. எனவே, இத்தகைய பகுதிகளில், சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, பொது/சமுதாய பயன்பாட்டிற்கான நவீன கழிப்பிடங்கள், பாதாளச் சாக்கடை கட்டமைப்பு, ஆற்றல்மிகு தெருவிளக்குகள் போன்ற மக்களுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை மேலும் சிறப்பான நிலையில் அமைத்துத்தர வேண்டியது அவசியமாகிறது.

(இ) வேகமாக நகரமயமாகிவரும்/வளர்ச்சியடைந்து வரும் பெரும்பாலான சிறிய உள்ளாட்சி அமைப்புகளால் மக்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி/இடப்பற்றாக்குறை நிலவுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதித் திட்டங்களை நிறைவேற்றுதல், மக்களுக்கான அடிப்படை வசதிப்பணிகள்/சேவைகளின் விரைவான, திறம்பட்ட செயலாக்கத்திற்குத் தேவைப்படும் பொறியாளர்கள் உள்ளிட்ட பணியமைப்பு குறைந்த அளவிலேயே உள்ளதை களையவும் (to overcome) நகராட்சி மன்ற அமைத்துருவாக்கம் அவசியமாகிறது.

(ஈ) பேரூராட்சிகளை அல்லது பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை இணைத்து இவ்வாறு நகராட்சி மன்ற அமைத்துருவாக்கம் செய்வதால், தரமுயர்த்தப்படும் பகுதிகள் அனைத்திலும் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் அவர்களுக்கு கிடைக்கும். இந்த மேம்பாட்டினால், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

8. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கம் செய்வது குறித்து, 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1999) பிரிவு 3–இல் பின்வருமாறு வகை செய்யப்பட்டுள்ளது:–

3. (1) The Governor may, by notification, having regard to the population of constitution of the area, the density of the population therein the percentage of employment in municipality, non-agricultural activities, the revenue generated for local administration, the economic importance or such other factors as he deems fit, constitute any local area as,

(b) a "municipal council" where the population is estimated at not less than thirty thousand and the annual income such area is not less than fifty lakh of rupees;

(1-A) Notwithstanding anything contained in sub-section (1), the Governor may, by notification, having regard to the percentage of employment in non-agricultural activities, the economic, historic or touristic importance or such other factors as he deems fit, declare his intension to constitute any local area as a town panchayat, a municipal council or a municipal corporation, as core may be.

xx xx xx

(2) (b) On the publication of the notification under sub-section (1) or under sub-section (1-A) or under clause (b) of this sub-section, any person residing within the local area concerned in relation to which any such notification has been published or any municipal council affected by any such notification may submit objections, in writing, to any officer authorised in this behalf within six weeks from the date of publication of such notification.

9. இந்நிலையில், அரசு மேலே பத்தி 5–இல் உள்ளவாறான மாவட்ட ஆட்சித் தலைவர்களின் செயற்குறிப்புகளை கவனமாக பரிசீலனை செய்து, தொடர்புடைய பேரூராட்சிகள்/ஊராட்சிகளை இணைத்து அரூர், சூலூர், மோகனூர், கவுந்தம்பாடி, நாரவாரிக்குப்பம் மற்றும் வேப்பம்பட்டு ஆகிய 6 புதிய நகராட்சி மன்றங்களை 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 (1) (b) ஆம் பிரிவின் கீழ் அமைத்துருவாக்கலாம் எனவும்; மேலும், அச்சட்டப்பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 'முப்பதாயிரத்திற்கும் குறையாத மக்கள் தொகை' என்ற வரையறையை நிறைவு செய்த நிலையில், போளூர், செங்கம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 பேரூராட்சிகளையும், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவை ஏற்று, 2023–24–ஆம் நிதியாண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அவர்களின் பதிலுரையினை செயற்படுத்தும் நோக்கத்தில், வணிக வளாகங்கள், கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு திட/திரவக் கழிவு மேலாண்மை, குடிநீர் வழங்கல் சேவைகள் மற்றும் பிற உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி ஏற்ற சேவைகளை வழங்கிடவும் மக்கள் தொகை, பேரூராட்சிகளின் வருவாய், பொருளாதாரம் மற்றும் சுற்றுலா முக்கியத்துவத்தின் அடிப்படையில் சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சி, நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்,

அவிநாசி பேரூராட்சி மற்றும் ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சி ஆகிய 4 .பேரூராட்சிகள் என மொத்தம் . 7 பேரூராட்சிகளை, மேற்படி சட்டத்தின் 3 (1–A)–இல் நிர்ணயிக்கப்பட்டுள்ள காரணிகளின் அடிப்படையில், நகராட்சி மன்றங்களாக அமைத்துருவாக்கலாம் எனவும் உத்தேச முடிவு மேற்கொண்டு அவ்வாறே ஆணையிடுகிறது.

10. இதனடிப்படையில் உத்தேச நகராட்சிகளுக்கான வார்டு எண்ணிக்கை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு, நகராட்சி மன்றங்களுக்கான அடுத்த பொது தேர்தல் நடத்தப்படும்.

11. இதுகுறித்து, 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின், 3–ஆம் பிரிவின் வகைமுறைகளின்படி, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3–ஆம் பிரிவின் (1) (b) மற்றும் (1–A) உட்பிரிவுகளின் கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கைகள் (ஆங்கிலத்தில்), 31.12.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

12. இவ்வரசாணையைச் செயல்படுத்துவது குறித்த தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

**தா. கார்த்திகேயன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்:–**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை
தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும்
அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 028.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 600 015.
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 600 009
சட்டத்துறை, சென்னை – 600 009
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம்,
சென்னை – 600 106
செயலாளர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், அரும்பாக்கம்,
சென்னை – 600 106
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வங்கல் (ந.ப.–1 மற்றும் அ.ந–2) துறை,
சென்னை – 600 009
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 31.12.2024

## APPENDIX

## NOTIFICATION – I

In exercise of the powers conferred by clause (b) of sub-section (1) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the local areas specified in column (3) as Municipal Councils specified in column (4) of the Table below:-

## THE TABLE

| Sl. No. | Name of the Panchayat Union | Name of the Local Areas | Name of the Municipal Council |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | Harur | Harur Town Panchayat | Harur |
| | | Mobirippatti Village Panchayat | |
| | | Dhoddampatti Village Panchayat | |
| 2. | Sulur | Sulur Town Panchayat | Sulur |
| | | Kalangal Village Panchayat | |
| | | Kangayampalayam Village Panchayat | |
| 3. | Mohanur | Mohanur Town Panchayat | Mohanur |
| | | Komarapalayam Village Panchayat | |
| | | Rasipalayam Village Panchayat | |
| | | Manapalli Village Panchayat | |
| | | Pettapalayam Village Panchayat | |
| 4. | Bhavani | Kavundapadi Village Panchayat | Kavundapadi |
| | | Salangapalayam Town Panchayat | |

| Sl. No. | Name of the Panchayat Union | Name of the Local Areas | Name of the Municipal Council |
|---|---|---|---|
| | | P. Mettupalayam Town Panchayat | |
| 5. | | Naravarikuppam Town Panchayat | Naravarikuppam |
| | Puzhal | Alinjivakkam Village Panchayat | |
| | | Grantlyon Village Panchayat | |
| | | Pullilyon Village Panchayat | |
| | | Sendrambakkam Village Panchayat | |
| | | Theerthagiriyampattu Village Panchayat | |
| | | Vadakarai Village Panchayat | |
| | | Vilangadupakkam Village Panchayat | |
| | Villivakkam | Pothur Village Panchayat | |
| | | Pammadukulam Village Panchayat | |
| 6. | Tiruvallur | 25 Veppampattu Village Panchayat | Veppampattu |
| | | 26 Veppampattu Village Panchayat | |
| | | Perumalpattu Village Panchayat | |
| | | Nathamedu Village Panchayat | |

Based on the above constitution, wards will be divided for the next General election.

2. Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any local authority affected by this Notification, may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St. George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil

Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D. KARTHIKEYAN**
**Principal Secretary to Government**

**//True Copy//**

**Section Officer.**

## NOTIFICATION – II

In exercise of the powers conferred by sub-section (1-A) of Section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu having regard to the economic, historic or touristic importance, hereby declares his intention to constitute the entire local areas specified in column (2) of the table below as Municipal councils:-

### THE TABLE

| Sl.No. | Name of the Local areas |
|---|---|
| (1) | (2) |
| 1. | Polur Town Panchayat |
| 2. | Chengam Town Panchayat |
| 3. | Kanniyakumari Town Panchayat |
| 4. | Sankagiri Town Panchayat |
| 5. | Kothagiri Town Panchayat |
| 6. | Avinashi Town Panchayat |
| 7. | Perundurai Town Panchayat |

Based on the above constitution, wards will be divided for the next General election.

2. Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any local authority affected by this Notification, may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St. George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D. KARTHIKEYAN**
**Principal Secretary to Government**

**//True Copy//**

Section Officer